DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.6**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | முருகன் |
| Father Name | : | சுந்தர்ராஜ் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2025.

(3 வது எதிரி இறந்துவிட்டார். 1, 2, 4, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் தென்தாமரைக்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.01.2016 ம் தேதி சி1 திடீர் நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தநாளை முன்னிட்டு மாலை அணிவிப்பவர்களுக்கு பாதுகாப்புக்கு திலகர் திடல் உதவி ஆணையாளர் அவர்களிடம் அறிக்கை செய்து பாதுகாப்பு அலுவல் புரிந்தோம். அப்போது சுமார் 01.15 மணியளவில் TN 65 E 2325 சுமோ வாகனத்தில் வந்த வீரக்குமார், கணேசன், நாராயணன், சக்திவேல், கந்தசாமி மற்றும் ஒருவர் கட்டபொம்மன் சிலைக்கு மாலை அணிவிப்பதற்கு அதிக கூட்டத்தை அழைத்து வந்து தடையை மீறி மாலை போட வந்ததால் வாக்குவாதம் ஏற்பட்டு போலிஸ் போட்டோகிராபர் தலைமை காவலர் 308 பாண்டிச்சாமி என்பவர் அவர்களை வீடியோ எடுத்துக்கொண்டிருந்த போது, எங்களை ஏன் போட்டோ எடுக்கிறீர்கள் என்று தகராறு செய்து கைகள் மற்றும் கன்னத்தில் அடித்து கேமராவை பிடுங்கி உடைத்து தகராறு ஏற்படுத்தினார்கள். காவல் உதவி ஆணையாளர் அவர்கள் உத்தரவின் பேரில் சில காவலர்களுடன் கூட்டத்தை கலைத்து வரும் போது

பின்னால் இருந்து கற்களைக்கொண்டு எறிந்து கொண்டிருந்த போது திலகர் திடல் காவல் உதவி ஆணையாளரின் வலது கையில் கல் பட்டு ரத்தக்காயமும், தல்லாகுளம் போக்குவரத்து உதவி ஆய்வாளர் திரு.திருமலைக்குமாருக்கு இடது காலில் அடிபட்டு காயம் ஏற்படுத்தியும், S.S.காலனி திரு.ரவிச்சந்திரன் என்பவரின் வலது கையில் அடிபட்டும் இருந்தவர்களை குறைந்தபட்ச பலம் மூலம் விரட்டியதில் போட்டோகிராபரை கெட்ட வார்த்தைகளாலும் பேசியும் கேமராவை உடைத்தும் இருந்தவர்களை விரட்டும் போது கீழே விழுந்தவர்களை மடக்கி பிடித்து விசாரித்ததில் வீரக்குமார் தலைமையில் வந்தவர்களில் ஐந்து பேரை மடக்கி பிடித்து நிலையம் கொண்டு வந்து நிலையத்திற்கு நானும் தலைமை காவலர் கிங்ஸ்லி, தலைமை காவலர் சங்கர நாராயணன் ஆகியோர்கள் சேர்ந்து நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்கள் முன்னிலையில் எதிரிகளை ஆஜர்படுத்தி போட்டோகிராபர் பாண்டிச்சாமி என்பவர் எழுத்துமூலமாக புகார் அளித்தார். என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

<u>1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

சம்பவ சமயத்தில் நான் பாக்கெட் டயரி வைத்திருந்தேன். இந்த வழக்கு சம்பந்தமான நிகழ்வுகளை என்னுடைய பாக்கெட் டயரியில் குறித்து வைத்தேன். அந்த பாக்கெட் டயரியை சார்பு ஆய்வாளர் விசாரணையின் போது அவரிடம் காட்டவில்லை. கட்டபொம்மன் அவர்களின் சிலையை சுற்றி தடியடி உத்தரவு உயர் அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்டது. தடியடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும், தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்ததும் கூட்டம் நாலாபுறமும் சிதறி ஓடியது என்றால் சரிதான். அந்த கூட்டத்தில் சுமார் 1000 லிருந்து 1500 நபர்கள் இருந்திருப்பார்கள். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், அவர்கள் எங்கள் உயர் அதிகாரிகளுக்கு காயம் ஏற்படுத்தவில்லை என்றும், கேமரா எதையும் உடைக்கவில்லை என்றும், தள்ளுமுள்ளுவில் உயர் அதிகாரிளுக்கு ஏற்பட்ட

காயத்தை வைத்து கூட்டத்திற்கு வந்த அப்பாவி பொதுமக்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2 வது எதிரி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**<u>4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.